ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்

திகதி 2021.12.15


# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2021 நவெம்பர்

தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 நவெம்பரில் விரிவடைந்தன

**நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குத் திரும்புவதிலிருந்து நன்மையடைந்து, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2021 நவெம்பரில் தொடர்ந்தும் விரிவடைந்து 61.9 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** உற்பத்தி, புதிய கட்டளைகள் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு துணைச் சுட்டெண்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் இவ்வதிகரிப்பிற்கு தொடர்ந்தும் பிரதானமாகப் பங்களித்தன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 61.9**

2021 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 1.5 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

புதிய கட்டளைகளில் குறிப்பாக உணவு மற்றும் குடிபானத் துறைத் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. எதிர்வருகின்ற பண்டிகைக் காலத்திற்காக முன்னைய மாதத்தினைவிட 2021 நவெம்பரில் தாம் அதிக கட்டளைகளைப் பெற்றுக்கொண்டதாக இத்துறையைச் சார்ந்த பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், மாதகாலப்பகுதியில் உற்பத்தி விசேடமாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையில் அதிகரித்தது. பருவகால கேள்விகளை நிறைவுசெய்வதற்கு 2021 நவெம்பரில் தமது உற்பத்தி மட்டங்களை அதிகரிக்கக்கூடியதாவிருந்தது என இத்துறையினைச் சார்ந்த பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். அதேவேளை, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தொழில்நிலை மெதுவான வேகத்தில் விரிவடைந்தது.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **60.4** | **61.9** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 61.7 | 67.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 58.2 | 64.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 57.7 | 52.7 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.6 | 64.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 67.3 | 58.6 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

புதிய கட்டளைகளில் மற்றும் உற்பத்திகளில் மேம்படுதலுக்கிசைவாக கொள்வனவுகளின் இருப்பும் அதிகரித்ததுடன் எதிர்வரவுள்ள சீனப் புத்தாண்டு விடுமுறையின் காரணமாக வழங்கல் பக்க இடையூறுகளை எதிர்பார்த்து கொள்வனவுகளை அதிகரித்ததாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் தயாரிப்புத் துறையைச் சார்ந்த சில பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். அதேவேளை நிரம்பலர் விநியோக நேரமும் 2021 நவெம்பரில் மெதுவான வீதத்தில் நீட்சியடைந்தது. பிரதானமாக, உலகளாவிய பண்ட விலைகள் உயர்வடைதல் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவில் தொடர்ச்சியான அதிகரிப்பு, அனைத்துத் துறைகளையும்சார்ந்த அநேகமான பதிலிறுப்பாளர்களினால் முக்கிய கரிசனையாக எடுத்துக்காட்டப்பட்டிருந்தது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளில் மேலும் மேம்பாடுகளை எதிர்பார்த்து, அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் உயர்வான மட்டங்களில் காணப்பட்டன.

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2021 ஒத்தோபரிலிருந்து 0.1 சுட்டெண் புள்ளிகளினால் குறைவடைந்து 2021 நவெம்பரில் 54.2 இனை எட்டியது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 நவெம்பரில், இந்தியா, ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம், ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வீதத்தில் அதிகரித்தது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்காவின் கொ.மு.சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 திசெம்பர் 14இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண்ணானது, 2021 நவெம்பரில் 62.1 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, மேலும் உறுதியான செயலாற்றுகையினைக் குறித்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் மூலம் இவ்வதிகரிப்பிற்கு துணையளித்திருந்தன.

பிரதானமாக, நிதியியல் பணிகள் மற்றும் போக்குவரத்து ஆகிய துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் நவெம்பரில் புதிய தொழில்கள் அதிகரித்தன. உலகளாவிய நோய்த்தொற்று தொடர்புபட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் எதிர்வருகின்ற பண்டிகைக் காலம் என்பவற்றுக்கு மத்தியில் நுகர்வோரின் எண்ணப்பாங்கு மாற்றத்தினைத் தொடர்ந்து கேள்வியில் மேலும் மீட்சியிலிருந்து உருவெடுத்து தொழில் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இரண்டாவது மாதத்திலும் அதிகரித்தன. அதற்கமைய, நிதியியல் பணிகள், போக்குவரத்து, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் அத்துடன் வேறு தனிப்பட்ட நடவடிக்கைகள் துணைத் துறைகளில் முக்கிய மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டிருந்த அநேகமான துணைத் துறைகளில் தொழில் நடவடிக்கைகள் மேம்பட்டன. எவ்வாறிருப்பினும், சில பதிலிறுப்பாளர்களினால் குறிப்பிடப்பட்டவாறு இறக்குமதி தொடர்புபட்ட பிரச்சனைகள் மற்றும் உள்ளீட்டுச் செலவுகளில் அதிகரிப்பு என்பவற்றுக்கு மத்தியில் வழங்கல் பக்க தடைகளினால் பணிகள் துறையில் காணப்படும் தொழில் நடவடிக்கைகள், தொடர்ந்தும் பாதிக்கப்பட்டிருந்தது.

தொழில் நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள் மீதான மேம்பட்ட நம்பிக்கை மட்டங்கள், 2021 மாச்சிலிருந்து முதற்தடவையாக 2021 நவெம்பரில் தொழில்நிலை அதிகரிப்பதற்கு வழிவகுத்தன. அதேவேளை, வழமை போன்று அலுவலர்கள் பணிக்கு அறிக்கையிட்டதற்கிணங்க நிலுவையிலுள்ள பணிகள் நவெம்பரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.9** | **62.1** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 58.3 | 65.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 66.2 | 71.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 45.0 | 52.0 | + | அதிகரிக்கின்றது வீழ்ச்சியிலிருந்து |
| நிலுவையிலுள்ள பணி | 49.5 | 47.3 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் | 70.3 | 74.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பிலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் எதிர்வருகின்ற பண்டிகைப் பருவகாலம் என்பவற்றுக்கு மத்தியில் அடுத்த மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகள் பற்றிய சாதகமான எண்ணப்பாங்கு மட்டம் 2019 நவெம்பரிலிருந்து உயர்வான வேகத்தில் வளர்ச்சியடைந்தது. எவ்வாறிருப்பினும், புதிய கொவிட்-19இன் திரிபு தமது வியாபாரத் தொழிற்பாடுகளில் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருப்பதன் சாத்தியம் பற்றி சில பதிலிறுப்பாளர்கள் கரிசனை கொண்டிருந்தனர்.

**பணிகள்**
**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**62.1**

2021 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 4.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2021 நவெம்பரில் 55.6 ஆக 2021 ஒத்தோபரிலிருந்து மாற்றமின்றிக் காணப்பட்டு உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் மேலும் விரிவடைதலினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, இந்தியா, யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 நவெம்பரில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], திசெம்பர் 15, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.